October, 1912. Registered No. M. 925.

# செந்தமிழ்ச் செல்வம்

திரிசிரபுரத்து மாதந்தோறும் வெளிவரும்.

ஒரு தமிழ்ப் பத்திரிகை

செல்வத்துட் செல்வம் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை.

தொகுதி 2.] பரிதாபி-௵ ஐப்பசி-மீ [பகுதி-7

உள்ளுறை. பக்கம்


| | |
|---|---|
| இராமாயணம் | 427 |
| ஆன்ம இலக்கணம் | 432 |
| பத்திராதிபர் புலம்பல் | 434 |
| ஐயவினா | 435 |
| விடுகதைகள் | 4[illegible] |
| நீர்வீழ்ச்சியும் மின்சாரமும் | 437 |
| பத்திரிகைகளின் பிரயோஜனம் | 438 |
| ஏன் இந்தியர்கள் நாளுக்குநாள் பலஹீனர்களாகிறார்கள் | 440 |
| கடிதம் | 442 |
| "பாந்திய" என்னும் பண்புடைக் குமரிசரிதை | 444 |
| நடராஜம் பஜே | 445 |
| பலதேசவர்த்தமானம் | 447 |


பத்திராதிபர்:— பண்டிதர், அமிர்தம். சுந்தரநாதபிள்ளை.
திரிசிரபுரம்.

வருஷசந்தா ரூ. 1. தபாற்கூலி அணா. 4. | Copy Right Registered. | வெளிநாட்டுக்கு ரூ. 2. தனி சஞ்சிகை அணா. 2

லெக்ஷ்மி விலாச பிரஸ், திருச்சி.

# செந்தமிழ்ச்செல்வம்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி-2] பரீதாபி-ஞு ஐப்பசி-மீ [பகுதி-7

## இராமாயணம்.

(409-ம் பக்கத்தொடர்ச்சி)

இராமாயணகதை பதினெண்புராணங்களினுள்ளுங்காணக் கிடப்பதன்றித் தனி இராமாயணமாகவுஞ் சிலவுள. வால்மீகராமாயணம் கம்பராமாயணம் என்னும் இரண்டுமெல்லாமல் அத்யாத்மராமாயணம், ஆனந்தராமாயணம், அத்புதராமாயணம், அக்னிவேச்யராமாயணம், மந்த்ராராமாயணம், சங்கிரகராமாயணம், ஜைனராமாயணம், ராமசரித்திரமானசம், த்விபதராமாயணம் என்றும் பலவுள.

இன்னும், மகாபாரத காவியத்திலும் ஸ்ரீராமகதை சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது. ஒவ்வொன்றிலும் சொல்லப்பட்டுள்ள ஸ்ரீராம சரித்திரத்திலும் சிறிதுசிறிது கதாபாகங்கள் மாறுபட்டிருக்கின்றன

பத்மபுராணத்திற் சொல்லப்படும் கல்ப்பாந்தராராமாயணத்திற்கும் வால்மீகராமாயணத்திற்கும் அநேகபேதமுண்டு.

அத்புதராமாயணத்திலும், யோகவாசிஷ்டத்திலும், சொல்லப்படும் ராமசரிதைகள் வால்மீகமுனிவராற் சொல்லப்படவில்லை. ஸ்ரீராமர் அயோத்தியில் பட்டாபிஷேகம் பெற்றபிறகு நடந்தவிஷயங்கள் ஆனந்தராமாயணத்தில் எட்டுக்காண்டங்களில் வர்ணிக்கப்படுகின்றன.

இது நிற்க, வால்மீகராமாயணத்தை ஆதாரமாகவுடைய அநேக காவியங்களிலும் நாடகங்களிலும் சம்புகளிலும் இராம சரித்திரக் கதை வெவ்வேறு விதமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

என்றாலும் அவைகள் ஒவ்வொன்றிற்கும் புராண ஆதாரங்களுண்டு.

நிற்க, பிரமத்தின் சொரூபம் பிரணவத்தால் வெளியிடப்படுகிறதென்றும், பிரணவத்தின் கருத்தைக் காயத்ரீமகாமந்திரம் விவரிக்கிறது என்றும், வேதங்களெல்லாம் காயத்திரீயின் வியாக்கியானம்

என்றும் ஸ்ரீமத் இராமாயணம் வேதங்களின் தத்வார்த்தத்தை வித்தாரமாய் உபதேசிக்கிறதென்றும் அதன் இருபத்துநாலாயிரம் கிரந்தங்களில் ஒவ்வொரு ஆயிரமும் காயத்ரீமந்திரத்தின் இருபத்து நான்கு அக்கரங்களில் ஒவ்வொன்றைமுறையே முதலெழுத்தாகப்பெற்றிருக்கிறதென்றும் வடநூற் புலவர்கள் கூறக்கேட்கின்றோம்.

ஸ்ரீஇராமசரித்திரமானது இருக்குவேதமந்திரங்களின் ரூபமாய் நாரத மகரிஷியால் வால்மீகருக்கு உபதேசிக்கப்பெற்றது அதையே அவர் ஸம்க்ஷேபராமாயணமாய்ச்செய்தார்.

ராமாயண விருத்தாந்தம் ஒரேகாலத்தில் ஒரேயிடத்தில் ஒரே தடவையில் நடந்த தல்லவெனப் பெரியோர் கூறுவர்.

ஒவ்வொரு கல்பத்திலும் ஸ்ரீராமாவதாரமும் ராமாயணமும் உண்டு என்பர்.

இதனாலே இந்தராமாயணகாவியம் ஒரு காலத்திலாவது ஒரு தேசத்திலாவது இருக்கும் ஜனங்களுக்காக ஏற்பட்டதல்ல என்பதும் எக்காலத்திலும் எத்தேசத்திலும் எல்லா ஆன்மகோடிகளும் மேலானகதியை அடையும் விதத்தை உணர்த்துதற்கே ஏற்பட்டுள்ளதென்பதுந் தெளிவாகின்றது.

மேலைநாட்டு வடமொழிப்புலவர்களிற் சிலரும் அவர்களைப்பின்பற்றும் நம் நாட்டினரிற் சிலரும் இராமாயணகதை சரித்திரமல்லவென்றும் உண்மையாய் நடந்ததல்லவென்றும் ஆரியர்கள் தென் தேயத்திற் படையெடுத்துச் சென்றதை வர்ணிக்குங் கதை யென்றும் கூறுகின்றனர். இன்னுஞ்சிலர் 'சீதை' என்பது கலப்பையின் நுனியால் உண்டாக்கப்பட்டபிளப்பு "இராமன்" பயிரிடுகிறவர்களைக்குறிக்கும்அடையாளப்பெயர், ஆதலால்இதுவிவசாயத்தைப்பற்றிக்கூறும் நூல் என்கின்றனர்.

மேலை நாட்டவர் நம்மதம், கொள்கை முதலிய வற்றிற்கு முற்றும் மாறுபட்டவர்கள். அவர்கள் நம் நாட்டு வழுக்கவொழுக்க நாகரீகங்களையும், தர்மங்களையும், பற்றிப்போதிக்கும் சரித்திரத்தையுணர்ந்து கோடல் முயற் கோடுபோல அருமையுடைத்தாம். அறியத்தவஞ் செய்திருப்பினும் முற்று முணர்ந்துகோடல் அருமையினுமருமையே.

நமது மதம் கொள்கை முதலியவற்றிற்கு மாறுபட்ட பிறர் நம் மதம் முதலியவற்றைக்குறைவு படுத்திக்காட்டவே முயற்சியுடையரா

ய்த்தம் அபிப்பிராயத்துக்குத்தக்கபடி பொருள் எங்கே கிடைக்கு மென்றே நம்நாட்டு நூல்களையுங் காவியங்களையும் ஆராய்வர். இடம் இல்லாதிருப்பினும் வலிந்து பொருள் கொண்டு மொட்டைத்தலைக் கும் முழங்காலுக்கும் முடிச்சிடுவது போல முடிபோட்டுமுயலுவர். அதனை ஆடு கசாப்புக்காரனையே நம்புவதுபோல் அவர்மொழியையே வேதமொழியாகக்கொண்டு நம்மவர் மருண்டு மொழிந்தலைவது தகா தெனக் கற்றவர் கூறுகின்றனர்.

ஈங்குயாம் கூறவந்தது கிளிப்பிள்ளைகள் போல ஒருவர் கூறி யதையே கூறாது ஒவ்வொருவர் கூற்றையும் நன்குய்ச் சிந்தித்துத் தமது அறிவால் ஆராய்ந்து உண்மை யீதென அறிந்து கூறவேண்டு மென்பதே.

மேலை நாட்டார்களின் அற்புத சரித்திரங்கள் எதுவும் எவ்வள வுக்கு எவ்வளவு எட்டிஎட்டி வைத்துப்பார்த்தாலும் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முற்பட்ட தொன்றுமேயில்லையெனத் தெரிகின்றது.

நமது நாட்டுத்திவ்விய சரிதங்கள் எத்தனையோ ஆயிரவருஷங் களுக்கு முற்பட்டதா யிருந்தும் பிறழ்ச்சியின்றி நடைபெற்று வரு கின்றது.

போயர் யுத்தம் சிலவருஷங்களுக்கு முன் நம்மவர் கண்ணுக்கு முன் நடந்தது. சற்றேறக்குறை பத்துவருஷங்களுக்கு முன்நடந்த யுத்தத்தைப்பற்றி முற்றிலும் பேதமான மூன்று சரித்திரங்கள் ஏற் பட்டிருக்கின்றன, இன்னும் எத்தனை ஏற்படுமோ என்கின்றனர்.

ஆகையால் விவேகிகளுக்கு உண்மையையறிதல் அருமையான தல்ல. இனி நம் இராமாயணத்தின் சிறப்பையும் தெய்விகத்தையும் நம்மவர் கொண்டுள்ள அபிமானத்தையும் பற்றிச்சிறிது பேசி வால் மீக இராமாயணத்தையும், கம்பராமாயணத்தையும், முறையே முத லிலிருந்து கடைசிவரை ஆராய்ந்து கதைகளையும், அவையுணர்த்தும் நீதிகளையும், கவிகளின் பெருமைகளையும் கவிகளின் அந்தரங்கங்களை யும் எழுதப்புகுவாம்.

ஸ்ரீமத் இராமாயணம், அறம்பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகைப்பயனையும் தரவல்லது.

நூலின் இலக்கணமும் இதுவன்றே. இதுபற்றியன்றே "அறம் பொருளின்பம் வீடடைதல் நூற்பயனே" என்றனர் இலக்கண ஆசி ரியரும்.

தற்காலத்திலும் நியாயசபைகளில் சாட்சி சொல்வோர் இராமா

யணத்தைக்கையில் வைத்துக்கொண்டு பிரமாணஞ் செய்வதைப்பார்த்திருக்கிறோம்.

நியாயமில்லாத கடனைக்கொடுக்கும்படி நேரிடும் போழ்து "பணத்தை இராமாயணத்தின் மேல்வைக்கிறேன், நியாயமானால் எடுத்துக் கொள்ளட்டும்" என்றும் "இராமாயணத்தின் மேற் பிரமாணமாய்ச் சொல்லுகிறேன்" என்றும் சொல்லுவதுண்டு, இராமாயண கிரந்தத்தைவைத்துக் கடன்வாங்குவதும் கடன் கொடுப்பதும் வழக்கம் இதனால் இது மேலான சத்திய முடையதென்றும் தெய்வீக முடையதென்பதும் விளங்கும்.

"இராகவன் கதையி லொருகவிதன்னி லேகபாதத்தினை யுரைப்போர்
பாரவரு மலரோ னுலகினுலவனும் பன்முறை வழுத்தவீற் றிருந்து
புராதனமறையுமண்டர்பொற்பதமும்பொன்றுநாளதனினும்பொன்றா
அராவணையமல னுலகெனும்பரம பதத்தினை யணுகுவ ரன்றே"

என்பன முதலிய கவிகளாற் கவிச்சக்கிர வர்த்தியாகிய கம்பரும் இராமாயணக்கதையின் மகத்துவங்கூறிப் போந்துள்ளது கொண்டு தெளியலாம்.

புத்திரனில்லாதவர்கள் இராமாயணத்தையாவது அல்லது அதில் சுந்தரகாண்டத்தையாவது படித்துப்பலன் பெற்றிருக்கின்றனர். தமது இஷ்டப் பூர்த்தியைப்பெற விரும்பியவர்கள் இராமாயணச் சுவடியில் கயிறிட்டுப்பார்ப்பதுண்டு.

வியாதியுடைய ஒருவன் மருந்துகளால் இனி முடியாது என வைத்தியரால் கைவிடப்பட்டு மரணாவஸ்தையில் இருக்கும் போழ்து இராமாயணத்தில் சுந்தரகாண்டத்தை வாசிப்பதுண்டு; அவ்வாறு வாசித்தால் ஆஞ்சநேயர் கிருபையால் வியாதி நீங்கிச் சுகமுறுவாரென்பது பெரியோர் அபிப்பிராயம். அவ்வாறு குணமானவரும் பலருண்டு.

இவ் இராமாயணம் பிரமபுத்திரராகிய நாரதரால் வால்மீகி முனிவருக்கு உபதேசிக்கப்பட்டது.

இதனை "நாரணன் விளையாட்டெல்லா நாரத முனிவன் கூற
ஆரணக் கவிதை செய்தா னறிந்தவான் மீகியென்பான்"
எனக்கூறியுள்ளதனாலுமறிக.

நாரதர்பால் உபதேசம்பெற்ற வால்மீகமுனிவர் அதனையே சிந்தித்துக்கொண்டிருந்து மாத்யா ஹ்னிக ஸ்நானஞ்செய்வதற்காக கங்

கைக்குச் சமீபத்திலுள்ள தமசாநதிக்கரைக்குச் சென்றார். இந்திரியங்களையும் மனதையும் ஒருமைப் படுத்திக்கொண்டு ஸ்நாந ஸந்த்யா ஜபதபங்களுக்குத் தகுந்த ஏகாந்தமான இடத்தை நாடி நதிக்கரையிலுள்ள காட்டினூடே சென்றார்.

சாபானுக்ரக சக்தியுள்ள வான்மீகமுனிவர் செல்லும் போழ்து ஆங்கே இரண்டு க்ரௌஞ்சப்புட்கள் விளையாடிக்கொண்டிருப்பதைக் கண்டார். ஆணும் பெண்ணும் ஒன்றை விட்டொன்று பிரியா இயல்புடைய இவைகள் மனக்கவலையில்லாமல் இனிமையாகச் சப்தித்துக் கொண்டு மெய்மறந்து க்ரீடித்துக்கொண்டிருந்தன. அப்பொழுது ஒரு வேடன் தனக்கு யாதொரு குற்றமுஞ்செய்யாத அப்பட்சிகளில் ஒன்றை வால்மீகமுனிவருக்கெதிரே பாணத்தாலடித்து வீழ்த்தினன், பெண்பறவை ஒருகணங்கூட அதைவிட்டுப்பிரியாததாலும், தன் ஆசை பூர்த்தியாவதற்குமுன் அது கொல்லப்பட்டதாலும், துக்கந் தாங்காமல் கேட்போர் மனமுருகிப்பதைக்கும்படிக் கதறிற்று. கருணையே உருவாகிய வால்மீகமுனிவர் இரக்கங்கொண்டு புணர்ச்சிக் காலத்தில் இப்பிராணிகளை இவ்வேடன் அடித்துக்கொன்றது பெரும்பாவம் என்று சொல்லி வேடன் மேற் கோபங்கொண்டு "அடே வேடா! இந்தக் க்ரௌஞ்சப் பட்சிகள் காமத்தால் மெய்மறந்து ஆனந்தமாய்க் கிரீடித்துக்கொண்டிருப்பதையுங் கவனியாமல் நீ ஆண் பறவையைக் கொன்றதால் அநேக வருஷங்கள் வரை இருந்த இடத்திலிராமல் அலையக்கடவாய்" என்றார்.

அச்சுலோகம் வருமாறு:—

"மாநிஷாத பிரதிஷ்டாம், த்வமகமஸ்ஸாஸ்வதீ ஸமாஹ-யத்க்ரவுஞ்சமிதுனாதேகம் அவதீஹிகாமமோகிதஹ"

பிறகு, ஐயோ! பெண்பட்சிபடுந் துக்கஞ் சகியாமல் வேடன் மேற் கோபங்கொண்டு எதையோ சொல்லிவிட்டோமே! காமக்ரோதங்களை யடக்கித் தபஞ்செய்யும் நமக்கு இதுதகுமா? என் தபத்தைக் கெடுக்கும்படியான கோபத்திற்கிடங் கொடுத்தோமே இதற்குக்காரணமென்னவென்று தனக்குள்ளே யோசித்தார். தன் வாக்கிலிருந்து உண்டாயவார்த்தைகள் பார்வைக்குச்சாபம் போலிருந்தாலும் நான்கு பாதங்களும் ஒவ்வொன்றிலும் சமமான எழுத்துக்களும் அமைந்திருக்கின்றன. வீணைமுதலிய வாச்சியங்களுக்கும் லயத்திற்கும் அனுகுணமாய்ப் பாடக்கூடியதாக இருக்கின்றது.

ஸ்லோகஇலக்கணங்கள் யாவும் பொருந்தியிருக்கின்றதுஎன்றுகண்டு இதுபதங்களின் சாதாரண சேர்க்கையல்ல தெய்வீகத்தால் தன் வாக்கில் எழுந்த சுலோகமே என்று கண்டுதன் சீடராகிய பாரத்துவாஜருக்குத் தெரிவித்தார். அவரும் அதுகண்டு வியந்தார்.

இதனையன்றோ கம்பநாடரும்

வாங்கரும் பாத நான்கும் வகுத்தவான் மீகி யென்பான்
தீங்கவி செவிக ளாரத் தேவரும் பருகச் செய்தான்
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை யன்பெனு நறவ மாந்தி
மூங்கையான் பேச லுற்றா னென்னயான் மொழிய லுற்றேன்.

எனக் கூறியுள்ளார்.

இருவரும் தமதுஆசிரமஞ்சேர்ந்து தெய்வீகத்தால் உண்டாகிய அச்சுலோகத்தைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கையில் பிரமதேவர் வால்மீகமுனிவரின் ஆசிரமத்திற்கு வந்தருளினர்.

(இன்னும் வரும்) **பத்திராதிபர்.**

## ஆன்ம இலக்கணம்.

(397-ம் பக்கத்தொடர்ச்சி.)

இங்ஙனம் ஆனந்தம் அனுபவிக்குங்கால் ஆன்மாக்கள் இறைவனேயாய் நிற்றலால் இறைவனுக்குத் தன்னைப்பற்றுதலென்னும் குற்றமுண்டாகாதோ வெனின், ஆகாது. என்னை? கண் ஒளியோடு கூடி நின்று ஆதித்தன் தன்னைக் காணுமாறு போல ஆன்மாவுடன் ஏகமாய் நின்று இறைவன் தன்னைக்காணுமாதலால் என்க. தனக்கெனச்செயலில்லாத ஆன்மா கண்டதென்று கூறுவதெற்றுக்கெனின் காண்டற்பயன் கண்ணுக்குப்போல ஆன்மாவுக்காதலின் என்க.

இங்ஙனம் அன்பினால் மறவாது ஏத்த இறைவனது சீபாதத்தை அணைதலாகிய இது சிவப்பேறும்.

இவ்வாறு பாசவிடுதி, சிவப்பேறு என்னும் இருபயனும் ஒருசேரப்பெற்றபோது பரமான்மா வென்பெயர் பெறும். உடம்பு நிற்குமளவும் ஜீவன் முத்தன் எனப்பெயர் பெறும், இந்நிலையேபரமுத்தி.இத்தகையமுத்திநிலையில்நிற்கும் ஆன்மாமலநீக்கத்தால் இறைவனோடு ஒற்றுமையுடையதாயினும் அதுபற்றிச் சிவசமயமென்றல் கூடாது, என்னை? இறைவன்இயல்பாகவேமலத்தினின்று நீங்குதலும்

ஆன்மா இறைவனருளால் மலத்தினின்றும் நீங்குதலுமாகிய வேற்றுமை உண்மையானும் ஒன்றைச் சார்ந்தபோது அதுவாய் நிற்பதன்றி பிறிதொன்றனையும் சார்ந்து நிற்குந்தன்மை ஆன்மாவிற் கின்மையால் சிவவியாபகத்தைச் சார்ந்தபோது அவ்வியாபகமாய் நின்று ஆனந்தம் அனுபவிப்பதன்றி அவ்விறைவன் செய்யும் பஞ்சகிருத்தியங்களைத் தான்வியாபித்துச் செய்தல் கூடாமையானும் என்க.

அங்ஙனமாயின் முத்தன் சிவனோடு சமமாவன் என்னுஞ் சுருதிகளுக்குக் கருத்து என்னையெனின் சிவமும் முத்தனும் பஞ்சகிருத்தியத்திற்கு உட்படாமை ஒன்றேபற்றி யென்க. இங்ஙனம் பரமான்மாவாய் எல்லா மலங்களும் பற்றறத் துடைத்து மெய்யுணர்ந்து நிட்டை கூடினார்க்கு உடம்புநிற்குமளவும்பிராரத்தவினை அவ்வுடம்பைப்பற்றி நிற்றலால் ஒரோவழி வினைவயத்தால் வாசனைவந்து தாக்கும். தாக்கவே விருப்பு. வெறுப்புக்கள் உளவாம்; உளவாகவே பரமே பார்த்திருப்பார்க்கு நிலமுதலிய ஏகதேசப்பொருள் காட்சிப்படும். படவே அவற்றைச்சுட்டி அறிவதாகிய விபரீதவுணர்வுமேற்பட்டு மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்தும் பிறவிக்கு வித்தாம். இவ்வாறு விருப்பு, வெறுப்பால் கன்மமலமும் நிலமுதலிய காட்சிப்படுதலால் மாயாமலமும் சுட்டியறிதலால் ஆணவமலமும் அறிவற்றம்பார்த்து தலைப்படுமாதலின் அறிவு, இச்சை, செயல்கள் புறத்தேச் செல்லுங்கால் அம்மும்மலமும் தாக்காதிருத்தற்பொருட்டு அனுபவம் வருவதற்கு முடிவாக அனுட்டித்த சாதனத்தை அனுட்டித்தலாகிய அறிவின் வியாபாரத்தையும் சிவனடியார்களோடு இணங்குதலாகிய இச்சையின் வியாபாரத்தையும் சிவனடியாரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவனெனக்கண்டுவழிபடுதலாகிய செயல்வியாபாரத்தையும் மேற்கொள்ளவேண்டும். இவ்வாறு பிராரத்தவினை முடியுமளவும் அனுட்டித்து வினைமுடிவில் உடலும் உலகமுந் தோன்றாது ஒப்பற்ற பேரானந்தப் பரவெளியாய் நிற்பன.

இங்ஙனம் பாசக்ஷயம், சிவப்பேறு, ஜீவன்முத்த நிலையாகிய இம்மூன்றும் ஆன்மாவிற்குச்சிறப்பியல்பிற் சிறப்பெனப்படும்சொரூபலக்கணமாம்.

மானுடப்பிறவி தானும்வகுத்தது மனவாக்குக்காயம் ஆனிடத்தைந்துமாடும் அரன்பணிக்காதலால்மானுட ஆக்கைபெற்றஒவ்வொருவரும் ஆன்மாவின் சிறப்பிலக்கணமாகிய சிவானந்தப்பேறை அடைதற்குமுயலவேண்டும்.

## முடிபுரை.

ஆஸ்திகச்சமயம்யாவும் கடவுள், ஆன்மா, பாசம் என்னும் முப்பொருளுண்மை ஒப்புக்கொள்ளுமென்பதூஉம், கொள்ளினும் அப்பொருள்களினிலக்கணம் உள்ளவாறு கூறுவது சைவசமயமே என்பதூஉம், முப்பொருள்களுக்கும் சொரூபஇலக்கணம் எனப்படும் சிறப்பியல்பும், தடத்த இலக்கணம் எனப்படும் பொதுவியல்புமென இரண்டியல்புகள் தனித்தனி உண்டென்பதூஉம், இலக்கண நூலார் கூறும் இவ்வியல்புகட்கும் இவற்றிற்கும் வேற்றுமை உண்டென்பதூஉம், ஆன்மா சார்ந்ததன் வண்ணமாம் தன்மையுடைய வியாபகப்பொருளென்பதூஉம், மூவகையாய் மூன்றவத்தையுறுமென்பதூஉம், கேவலம் பொதுவியல்பில் பொதுவென்பதூஉம், சகலம், சுத்தம் அறுவகைப் படுமென்பதூஉம், அவற்றுள் சகலத்தில் நிகழும் நான்கும் பொதுவியல்பிற் சிறப்பென்பதூஉம், சுத்தத்தில் நிகழும் இரண்டில் முன்னைய சாதனம் சிறப்பியல்பிற் பொதுவென்பதூஉம், பின்னையபயன்சிறப்பியல்பிற் சிறந்ததென்பதூஉம், பயனாகிய முத்திபெற்றகாலத்தும் ஆன்மா சிவத்துக்கடிமையேயன்றி சிவசமயம் அன்றென்பதூஉம், முத்தியிற் சிவசமமென்றது பஞ்சகிருத்தியத்திற்குட்படாமை பற்றியென்பதூஉம், உடம்போடு கூடி சீவன் முத்திநிலையில் நிற்குங்காலும் நிட்டைசாதித்தலும் சிவனடியாரோடிணங்குதலும் திருவேடத்தையும் சிவாலயத்தையும் சிவனெனவழிபடுதலும் வேண்டுமென்பதூஉம், இந்நிலையடைவதற்கே ஒவ்வொருவருமுயலவேண்டுமென்பதூஉம், பிறவுமாம்.

**போ. முத்தையப்பிள்ளை**

சைவப்பிரசாகரர், தூத்துக்குடி.

## புத்திராதிபர் புலம்பல்.

தமிழ்மொழி தன்னை யிந்நாள் தரணியிற் கற்பாரில்லை
இமிழ்கட லுலகில் யாரும் எழிற்றமிழ் நூலைக் கண்டால்
உமிழ்தர முன்னிற் கின்றார் உயர்தமிழ்ப் புலவர் யாரும்
அமிழ்தரா லாயிற் றந்தோ ஆய்தமிழ்க் கிதுவோ காலம்.

முன்போற் றமிழைப் பேணி முயன்றுகற் போரு மில்லை
முன்போற் கற்றோ ரும்மோ முன்னுள வள்ளல் போல

முன்னுற வந்து பொன்னை முகிலெனக் கொடுப்போ ரில்லை
முன்னுள நாள்போ லெண்ணி முடைமதி கொள்ளல் தப்பே.
செந்தமிழ் நடையிற் றோன்றும் சிறப்புறு பத்திரிக்கை
நந்தமிழ் நாட்டிற் கென்னே நாடிடிற் சிலவே யாகும்
வந்துமுன் னுதவு வாரும் வளர்நிலத் தில்லை யந்தோ
நொந்துபின் னவையும் மாய்தல் நுவல்தமிழ் நாட்டின் பாவம்.
என்னுரை சொல்வேன் விந்தை எண்ணுறு பெருமை யாளர்
மன்னிய குணத்தின் மிக்கார் மதிப்புறு செல்வ ரென்றே
பன்னுநம் பத்திரிக்கை பயனுற வனுப்பி வந்தேம்
நன்னய மாகப் பெற்று நாணயங் கொண்டு வாழ்ந்தார்.
பின்னதற் குற்ற கூலி பெறுவதற் கெண்ணி வீ. பி.
துன்னவே விடுத்த காலை தூயவர் சிறிது மோரார்
அன்னதைத் திருப்பி விட்டு அதிகமே நட்ட மாக்கி
என்மன நையச் செய்தே யிருக்கின்றார் நயந்து மாதோ.
வேண்டில ராயின் முன்னே விளம்புதல் கூடா தோதாம்
ஆண்டுவந் தடையுங் காலை யனுப்பினர்க் கனுப்பி னக்கால்
காண்டா வவற்கங் கார்வங் கதித்தில தென்றே யெண்ணி
மீண்டுநா மனுப்பா தம்மா மேவுவம் நயப்போர் மாட்டே.
நடை பெறு நம்பத் திக்கண் நயமுறப் பெற்று பின்னர்
நடை பல நடந்து கூலி நலமுடன் தருக வென்னில்
விடைபல கூறிப் பின்னும் விழலிலே யலையச் செய்து
கொடையில தெனினு மின்சொற் கூறிலர் விழல ரீங்கே.
இத்தகை நாளிற் பண்டை இயலறி வள்ளல் போல
சித்தம துவக்கச் சில்லோர் சிறப்புறப் பிறந்தா லன்றி
உத்தமத் தமிழ்க்கு முன்னி உயர்தமிழ் கற்போர்க் கும்மே
எத்துநீ ருலகி லில்லை இயல்பிழைப் பினிமே லந்தோ.

## ஐயவினா:

நவக்கிரகங்கள் யாவர்மக்கள்? சூரிய சந்திரர்களுக்குமட்டும் ஒவ்வொரு வீடாயும் மற்றக்கிரகங்களுக்கு இரண்டுவீடாயுமிருப்பதின் காரணமும் நக்ஷத்திரங்களின் காரணப்பெயரும் தனித்தனி அறிந்த ஆன்றோர்கள் இப்பத்திரிகை வாயிலாக அடுத்த மாதத்தில் வெளியாக்குவார்களென நம்புகிறேன் **ஜோ. கா. குமாரசாமிமுதலியார்**

உன்னியூர்.

## விடுகதைகள்!

### கல்விச் சிங்கங்காள்.

அடியில் கையொப்ப மிட்டிருக்கும் தங்களன்பனாகிய யான் தாங்கள் அடியில் கண்டிருக்கும் கதையின் உண்மையைச் செந்தமிழ்ச் செல்வ வாயிலாக அறிவிக்குமாறு கோறுகின்றேன்.

### கதை.

இடையில்லாத பெண்ணொருவள், வாயில்லாத குடமெடுத்து; கரையில்லாத ஏரிக்குத் தண்ணீருக்குப்போனாள். அங்கு, காலில்லா மானொன்று, வேரில்லாப்புல்லை மேய்ந்துகொண்டிருக்க; அதைக் கண்ட வேடனொருவன் வானத்தை வில்லாய் வளைத்து ஆற்றுமணலை அம்பாய்ப்பூட்டி எய்தான். அது, மானின்மேற் படாமல், மான்வயிற்றுக் குள்ளிருந்த குட்டியின்மேல் பட்டது. அதைக்கொண்டுவந்து காலில்லாப் பந்தலில் கட்டிவைத்தான். அதை, முகமில்லா நாய் கொண்டுபோய் விட்டது.

P. பரிமணப்பல்லவராயன்,
G. T. School, Trichinopoly.

எனது அருமைக் கணித விடுகதைப் புலவராகிய A. குப்புசாமி அய்யாவர்களுக்கு மித்திரன் வினவிய கணித வினா யாதெனிற் கீழே கண்டிருக்கிற கணிதவினாவுக்கு விடையருளவேண்டுமாய்க்கேட்டுக் கொள்கிறேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| மூன்று | 15 | 15 | 15 | 15 |
| மூன்று | 9 | 9 | 9 | 9 |
| மூன்று | 6 | 6 | 6 | 6 |
| மூன்று | 3 | 3 | 3 | 3 |
| ஒன்று | 1 | | | 1 |

இவைகளை எண்களைப்பிறிக்காதபடி ஐம்பது ஐம்பதாக இரண்டு வீட்டில் அடைக்கவேண்டியது.

| | |
|---|---|
| 50 | 50 |

இதனை வழியுடன்செய்யவேண்டியது.

### நொண்டிச்சிந்து.

"அந்தி சந்தி அடிபடுவான்—உலகில் அனைவர்கள் வீட்டிலேயும் படுத்திருப்பான் சந்தேகம் யாரும் நினையார்—வந்தபெண்கள் தானைக்கைப்பிடித்துக்கொள்வார்—தலையிலே ஐந்தெழுத்துப் பேருடையான்—குப்புச்சாமி அய்யரென்னும் நேயரைச்சொல்லச்சொல்லி யாடுபாம்பே—கூத்தாடுபாம்பே"

## வினுவிடை வேண்டும்.

ஒரு மாது தன்னிடுப்பில் ஒரு பையனை வைத்துக்கொண்டு ஊருக்குப்போய்க்கொண்டிருக்கையில் வழியில் ஒரு வாலிபன் ஷை மாதைக்கண்ணுற்று அம்மா இக்குழந்தை யாரென்று வினவ அதற்கு அம்மாது "இக்குழந்தையினுடைய தகப்பனூர் யாருக்கு மாமனூரோ அவருடைய தகப்பனூர் எனக்கு மாமனூரென்று சொன்னூள் ஆதலின் அம்மாதுக்கு ஷை குழந்தை யாதுமுறை வேண்டுமென்று மித்திரர்களைக் கேட்டுக்கொள்கிறேன்"

ஓருமூாம்பழக்காரி சிலபழங்கள் கொண்டுவந்தாள் அதை முறையே 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, ஆகக்கூறுகட்டிப் பார்க்கின்கூடையில் பழமானது மீதிப்படவில்லை ஆதலின் பழக்காரி கொண்டுவந்த பழங்கள் எத்தனை.

25th Andar Street TRICHINOPOLY. } T. V. Rethinavelu Pillai C/o V. A. Ramalingam Pillai P. T. O. Typist.

## நீர்வீழ்ச்சியும், மின்சாரமும்.

இப்புவியில் சிலவிடங்களில் மலைகளினின்று முற்பத்தியாகி வரும் நதிகளிற் சில உன்னதமான பாறையுச்சியினின்று கீழே மிகுந்த வேகத்துடனும், பெருமுழக்கத்துடனும் வீழ்தலைக்காண்பவர் யாவரும் கணக்கில்லா மகிழ்ச்சியடைதல் திண்ணம். வெண்முத்தேயுருண்டு கீழ்வீழ்வதொப்பவும், உருகியவெள்ளி துளித்துளிகளாய்ப் பரவி வீழ்வதொப்பவும் விழ்ந்து காலைக்கதிரவன் கிரணங்களிற் பட்டதும் ஒளிவீசும் நீர்விழ்ச்சியைக் கண்டின்பமுறுதார் யார்?

நூற்றுக்கணக்கானவடி யுயரத்தினின்றும் வீழ்தலால் நீரினது வேகம் மிகுதியாகவேயிருக்கும். மேனூட்டார், தமது பெருமுயற்சிக்கெட்டாது போவதொன்று மின்றெனவே துணிந்தாராயப் பற்பலதந்திரங்களுங் கற்றுப் பெருஞ்சக்கிரங்கள் கொண்டு நீர்வீழ்ச்சியின் வேகத்தினைத்தாங்கியதனை மின்சாரச்சக்தியாக மாற்றி வேண்டியவிடங்களுக்குக்கம்பி மூலமாய்க்கொண்டு சென்று பற்பலவேலைகட்கு முபயோகித்தல் கூடுமென்பதை ஸ்தாபித்து மிகவுமுழைத்து வருகிறூர்கள்.

நம் நாட்டுச் சிவசமுத்திரமென்னுமிடத்துக் காவிரிநதியின் நீர் வீழ்ச்சியொன்றுண்டு. அவ்விடத்து மேற்கண்டவாறு பலயந்திரங்கள் ஸ்தாபித்து மேற்கண்டவாறு மின்சாரசக்தியுண்டாக்கிக் கோலார் தங்கச் சுரங்கங்கட்குக் கம்பிகள் வழியே கொண்டு சென்று அங்கு சுரங்கம் வெட்டி யெடுத்தற்குள்ள [illegible]வேலையையும் செய்யும் வண்ணம் உபயோகப்படுத்துவது யாம் யாவருமறிவதொன்றே. இங்ஙனம் மின்சாரசக்திகொண்டு வேலை செய்வதனால் மிகுந்த வேலை சீக்கிரத்திற் செய்யப்படுவதன்றிச் செலவும் பதின்மடங்கு குறைவானதாகவே யிருக்கின்றது.

விளக்குகள் போடவும், மாவரைக்கும்; பெருத்த வியந்திரங்களை யியக்கி வேலை நடத்தவும் மற்றெந்தக் கடின வேலைகள் செய்யவும் நாகரீகமுற்ற நாடுகளில் மின்சாரத்தினை வெகுவாய்க் கையாள்கின்றனர். சாதாரணமாய் மின்சார வியந்திரங்களினின்று முண்டாகும் மின்சாரசக்தியை யுபயோகித்தலினும் நீர் வீழ்ச்சியினின்றுண்டாகும் மின்சாரத்தை யுபயோகித்தல் மிகவும் செலவற்றதாதலினாலிலாபந்தரத்தக்கது.

நீர் வீழ்ச்சியினின்றல்லாது இயந்திரங்களினாலுண்டாக்கப் படுஞ் சக்தியும் பலவேறு வகைகளிலுதவுகின்றது. எவ்வளவு தூரத்திலிருப்பினும் நேர் நின்று பேசுவதொப்பச் செய்தியறிவிக்க வல்லதாய விம்மின்சார சக்தியுமோர் அற்புதத்தினற்புதமே. எந்த வேலையினுபயோகிப்பினுஞ் செலவுங் குறைத்துச் சிரமமுமிலாது செய்வதனாலிஃதுலகினுக்கு நன்மை பயப்பனவைகளி லொன்றென்னலாம். இவ்வற்புதச் சக்தியைக்கண்டுபிடித்திராவிடின் இப்பொழுதொப்ப மிகவுமிலகுவாய்த் தந்தி சமாசாரங்களறியவும், உலகின் பற்பல விடங்களிலுள்ளோர் தமது நிலை முதலிய வுணர்வது மியலுமோ?

மின்சார சக்தியினாற் பல வண்டிகளு மியக்கப்படுகின்றன வென்னி னிதனதுயர்வை யென் னென்றுரைப்பது? இனி யுலகினிதனாலியலாதகாரிய மெதுவுமில்லாததாகவே கொள்ளலாம்.

K. S. Krishnamurthi.

—o—

## பத்திரிகைகளின் பிரயோஜனம்.

பரந்த பூமியில் எந்தப் பாகத்தில் நடக்குஞ் செய்தியை யேனு மற்றுமுள்ள விடத்தோரறிவதென்றாலும் பற்பல நூதன விஷயங்

களைப்பற்றி யாவருந் தெரிதலென்றாலும் பத்திரிகைகளே முக்கியமாக வேண்டுபவையாவன. பிரபலமாய்ப் பரவிச் சமாசாரமறிவிக்கும் பத்திரிகைகளில்லாவிடின் ஒரு நாட்டார் நாகரிகம் பெறுவது மிக்க தடைப்படும். ஓர் தேசத்துள்ளவர்க்கு அவர்களது நாகரீக நிலைமையும் நடையுடைபாவனையும் வேறு நாடுகளின் நாகரீகமும் நடையுடைபாவனைகளும் நன்மை தீமைகளும் அறிவிக்கவேண்டியது பத்திரிகைகளின் தொழிலாகும். அங்கங்கு நடப்பவையும் அவரவரது நாகரீகமும் மனமே வெளியே தெரியாதிருப்பின் யாதும் நன்மையுண்டாகாது.

அன்றியும், பகலெலாங் கடின வேலை செய்து விட்டுப்பின்பு அயர்ந்து களைப்பாறும் வேளையில் பலதேசவர்த்தமானங்களும் விநோத சமாசாரங்களுமே யொருவனை யின்புறுத்துமாதலால் அவைகள் நிறைந்துள்ள பத்திரிகைக ளின்றியமையாத சாதனங்களே. கண்ணியர் தம்மாராய்ச்சியும் கல்விமான்களின் அபிப்பிராயங்களு மிப்பத்திரிகைகளின் வழியாகவே வெளி வரக்கூடும், ஆதலின் எழுதப்படிக்கத் தெரிந்தோர்க்கும் படிக்கக்கேட்கு மியல்புடையார்க்கும் பத்திரிகைகள் மிகவும் நன்மைபயப்பவையாகவே யிருக்கின்றன.

இவைகளின் வாயிலாகவே யுலகிலுள்ளோர் பின் பற்றியொழுகற்குரிய நீதிமார்க்கங்களும், விவசாயம், சுகாதாரம், ரசாயன முதலியவைகளின் ஆராய்ச்சிகளும் வெளிப்பட்டு, கெடுவது பற்றுவோரையும் நல்வழிக் கொண்டுவந்துலகினடப்பதில் மிக்க அவசியமான அரிய பெரிய விரகசியங்கள் போதிப்பதிலிவற்றினு மேன்மையுடையவையிராவென்பது திண்ணம்.

ஓர் நாடு சற்றே நாகரீகக் குறைவுபட்டிருப்பினும் ஜனங்களந்தகாரத்திருந்து வருந்தினும், அந்தவேளையில் பிறநாட்டாருடைய நாகரீகப் பெருமையையும் சிறப்பையும் யெடுத்தோதி, தமது நாகரீகங்குறைந்த காரணங்களையும் அஃது நீங்கி நல்வழிப்பட்டு நாகரீகமடையவேண்டிய மார்க்கங்களையும் தெளிவா யெழுதிப் பின் முறையும் வற்புறுத்திச் சீர்திருத்தம் செய்வதில் முதன்மையாய் நின்று நன்மை பயத்தலே பத்திரிகைகளின் முதற்கடன். மேற்கண்ட பத்திரிகைகள் கஷ்டமின்றி யிலகுவாய்ப் பரவுதற்கு அச்சியந்திரசாலைகளும் தபாலாபீசுகளுமே முக்கியமானவைகளாயிருக்கின்றனவாதலால் ஒவ்வொரு நாட்டிலும் அச்சியந்திரசாலைகளுந் தக்கபரிபாலனஞ்செய்வோருமிருந்தாலின்றி யிவைகள் பரவுதலியலாது.

வரவர நம் நாட்டில் பல வேறு பாஷைகளினும் பத்திரிகைகள் வந்நலாவப் பெறுவதைக் கண்ணாரக் காண்கின்றோம். வெவ்வேறு கண்டத்துள்ளோரு மின்ன செய்கின்றனரென்பதையுந் தெரிந்துகொள்கின்றோம். மற்றையநாடுகள்போன்றே நாமும் நாகரீகமடைய வேண்டி முயற்சி செய்கின்றோம். ஜப்பான் முதலிய நாடுகளினின்றும் பிறநாடுகளுக்கு மாணாக்கர்கள் சென்று பற்பல சாஸ்திரங்களினும் பயின்று விற்பன்னராய்த் திரும்பி வந்து பற்பல தொழிற் சாலைகள் ஸ்தாபித்துத் தாமும் பொருள் தேடித் தம் தேயத்துள்ள மற்றவர்க்கும் தொழிற்சாலைகளில் வேலைகள் கொடுத்துப் பணமுதவித்தேச நன்மையை நாடியுழைக்கின்றதைக் கேட்டு நாமும் பலரை யயல்நாடுகட்கனுப்பிக் கற்றுவரச் சொல்கின்றோம், நாமும் செல்கின்றோம். இவையெல்லாம் நமக்கெட்டிய விதம் யாது? சமாசாரப் பத்திரிகைகளன்றோ நம்மை யிவ்வாறு தூண்டின?

ஆதலின் எவ்வித முயற்சி கைக்கொள்ளவேண்டினு மதற்குத் துணையாயு மூன்றுகோலாயு நின்றுதவுதற்குப் பத்திரிகைகள் மிகுதியும் காரணமாயிருக்கின்றன.

K. S. KRISHNA MURTI.

:0:

## ஏன் இந்தியர்கள் நாளுக்கு நாள் பலஹீனர்களாகிறார்கள்?

**ஆரியசகோதரி சகோதரர்களே!**

நாம் பட்டணங்களின் வீதி வழியாகச் செல்வோமாகில் அதிகமாக குறுகியமார்பும் ஆழ்ந்தகண்களும் ஒட்டிய கன்னங்களுமுடைய பலஹீனர்கள், அவஸ்தைப்படும் ஆனைக்காலர், குஷ்டரோகிகள், சொரிசிரங்குகள், கண்பார்வை இழந்தவர்கள், தேவாங்கைப்போல் தத்தளித்துக்கொண்டு போகிறவர்கள், தங்கள் மெலிந்த தேகத்தையும் வாடிய முகத்தையும் மறைப்பதற்கு, காலர், டை, சர்ட், கோட், ட்றவுசர், மூக்குக்கண்ணாடி முதலானதற்கால நாகரீக உடைகளால் அலங்கரித்துக்கொண்டு வெளியே போகிறவர்கள். இன்னும் பலர் நமது கண்களுக்கு தென்படுகிறார்களல்லவா?

ஆள் அக்கம் காரியத்தில் சொத்தை என்னும் பழமொழியைப் போல் மேற்சொன்னவர்களின் ஆடைகளை கழட்டுவோமாகில் புலித்தோலைப்பூனைபோர்த்துக்கொண்டிருக்கிறதாகத் தெரிகிறதேயொழிய வேறில்லை. இவர்களில் சிலர் தங்களின் தேகத்தின் துர்நாற்றங்களை

மறைக்க அத்தர் பன்னீர் புனுகு முதலான வாசனைகளைப்பூசிக்கொள்ளுகிறார்கள். மாதர்களிலும்பலர் இவ்வாறு இருப்பதை நாம்பார்க்கின்றோம்.

தற்போது வயித்திய சாலைகளில் சிறுவர்களின் வயித்தியம் தான் அதிகமாகஇருக்கின்றது. சிறுகுழந்தைகளுக்குக்கூட நீர்ச்சுருக்கு, சொறி சிரங்கு, கைகால் இழுப்பு, மேக ஊரல் கட்டிகள், குஷ்டம் முதலான பெரும் வியாதிகள் கூட வருகின்றன. சிறுவர்கள் ஏன் இவ்விதவியாதிகளுக்கு ஆளாகவேண்டும்?ஐயகோ? என்னதீங்கு செய்கிறார்கள்.

நமது முன்னோர்களோ நோயற்றவாழ்வுடன் நம்மைவிட அதிக காலம் உயிருடன் இருந்திருக்கிறார்களென்றும் 70, 80, வயதிலும் பாலியர்களைப்போல் வேலை செய்து வந்தார்களென்றும் சரித்திரங்களின் மூலமாகவும் நமது பெற்றோர்களின் மூலமாகவும் அறிகிறோம்

நம்மைவிட நமது பெற்றோர்கள் பலசாலிகளாகவும் (நமது பாட்டி பாட்டன் மார்கள்) அதிக பலசாலிகளாகவும் இருந்தார்களென்றும், சிலர் இன்னும் இருக்கிறார்களென்றும் நமக்கு தெரியவருகிறது.

இங்கிலாந்து, பிரான்சு, ஸ்பெயின், முதலான தேசங்களில் 29, 30, வயதுள்ள ஆடவர்களைச்சிறுவர்களென்றும் 23, 25, வயதுற்ற மாதர்களை சிறுமிகளென்றும் சொல்லுகிறார்கள். நமது முன்னோர்களும் அவ்வாறே ஆனால் தற்போது நமது மாதர்களை 25-வயதானால் கிழவிகளென்றும் 30, 35, வயதான ஆடவர்களை கிழவர்களென்றும்சொல்லுகின்றோம். • இதை சிலர் மறுக்கலாம், அவர்கள் கிழவி கிழவர்களென்றும் அழைக்கப் படாவிடினும், கிழவர்களைப்போற் சக்தியற்று சிலர் இருக்கிறார்களல்லவா? இதை எனும் ஒத்துக்கொள்வீர்களென்று நம்புகின்றேன்,

தற்போதுள்ள மாணாக்கர்களில் சிலர் 14, 15, வயதில் கண்களுக்கு கண்ணாடியுடன் தாங்கள் படிக்கும் அறைகளை வைத்தியசாலையாகவும் காப்பி (கிளப்) தங்கள் ஜீவனை உண்டாக்கும் முக்கிய விடாகவும் வைத்திருக்கிறார்கள். ஏனெனில் தலை நோய், தலைமயக்கம், காதுவலி, வயிற்றுவலி, சொறி சிரங்கு, கட்டி முதலான பல வியாதிகளில் ஏதேனும் இரண்டொன்று சில மாணாக்கர்களிடத்தில் குடிகொண்டிருப்பது சகஜம், இவர்களைவிட்டு வயித்தியர்கள் அவ்

லது பாடசாலைகளில் ஏற்படுத்திய வயித்தியர்கள் நாள்தோறும் வந்து இவர்களைப்பார்த்துப்போவது வழக்கமாய் இருக்கிறது. தங்களுக்கு வேண்டிய மருந்துகளை வாங்கிச்சீசா சீசாவாக அறைகளில் வைத்திருக்கிறார்கள். இரண்டு மூன்று மணிக்கொருதடவை ஏதேனும் ஆகாரம் சாப்பிடுகிறார்கள். நாள் ஒன்றுக்கு 4, 5, முறை ஆகாரம் எடுத்துக்கொள்ளுகிறார்கள். இவர்களுக்கு ஏதாகிலும் ஒரு வேளை சாப்பாடாவது அல்லது காப்பியாவது இல்லாமற்போய் விட்டால் வந்தது அதிர்ஸ்டம் வைத்தியர்களுக்கு. ஒருவேளை தவறினால் தண்ணீரில்லாத தாமரையைப்போல் தவித்து வாடிப்போய்விடுகிறார்கள். இதை நாம் மாணவர்கள் அதிகமாக இருக்கப்பட்ட நகரங்களிற்பார்க்கலாம். இவர்கள்வெயிலில் சற்றுப்போய்வந்தாலும்சரி அல்லது மழைஜலம் சற்றுமேலே பட்டு விட்டாலும் சரி, தலைவலி, குளிர் காய்ச்சல் வந்து விட்டது என்று சொல்லுகிறார்கள்.

ஆகா! இவர்களின் தேகம் எவ்வளவு நுட்பமானதோ? பறித்த ரோஜாமலரோ? வெயிலிலும் ஜலத்திலும் தென்படாமல் மூடிவைத்திருக்கும் பனிக்கட்டிகளோ? அல்லது மாவால் செய்த பொம்மைகளோ? யான் அறியேன். இப்பேர்பட்ட பிள்ளைகளுக்கு அவர்களின் பெற்றோர்கள் அடியில் வருமாறு கடிதம் எழுதிவிடுகிறார்கள்.

**கடிதம்.**

**சிரஞ்சீவி ராமானுஜத்திற்கு.**

தகப்பனார் எழுதியது க்ஷேமம். உன் தேகசவுக்கியம் எப்படி? சாயந்திரவேளைகளில் வெளியில் போய் விளையாடாமல் பாடங்களை நன்றாய் படித்து வரவும். 23உ முதல் 30உ வரையில் உனக்கு பள்ளிக்கூடம் இல்லையென்று Calandar மூலமாகத்தெரியலானேன். உன் மாமனார் இனி தாமதிக்கக்கூடாதென்று சொன்னதின் நிமித்தம் உனக்கு இந்த மாதம் 25உ சாந்திமுகூர்த்தம் நிச்சயித்து சாமான் சேகரித்து வருகிறோம். உனக்கு வேண்டிய சோடா, டீ, கோகோ, பிஸ்கத் தலைவலி மருந்து,சைக்கள், முதலானவைகளை எடுத்துக்கொண்டு 23உ இவ்விடம் வந்து சேரவேண்டியது தவறினால் நீ எனக்கு குமாரனல்ல! மற்ற விஷயங்கள் நேரில் பேசிக்கொள்ளலாம். தேகசவுக்கியம் எப்படி இருந்தாலும் சரி இவ்விடத்தில் தகுந்தவைத்தியர்கள் இருக்கிறார்கள். பார்த்துக்கொள்ளலாம்.

இப்படிக்கு,

உன, இ. ஏகாம்பரமையர்.

விலாசம் ·

இ. பி. இராமானுஜம்

4-வது பாரம்,

National High School

TRICHINOPOLY.

இக்கடிதத்தை இராமானுஜம் பார்த்து ஊருக்குப்போகாமல் இருந்தாலும் நமதுஏகாம்பரமய்யர் உடனே ஆள்அனுப்பிச்சேகரித்த சாமான்கள் வீணாகப்போகிறதென்று இராமானுஜத்தை அழைத்துக் கொண்டு போய்விடுகிறார்.

இச்சிறுவன்நிலமை எவ்வாறிருக்கதது இவனுக்குப்பிறக்குங்குழந்தைகள் வயித்தியர்களிடத்தில் தங்கள் தாய் தகப்பனாருடன் சிகிச்சை செய்துகொள்ளாமல் போய்விடுவார்களா? அல்லது ராமானுஜத்தை விட அதிக நுட்பமானதேகத்தை உடைத்தாய் இருக்கமாட்டார்களா? நகரங்களில் நோயாளிகளும் வைத்திய சாலைகளும் பெருகிவரத் தடையுமுண்டாகுமோ? இல்லை. இல்லை.

நம்மில் சிற் சிலர் தற்போது வியாபாரம், கைத்தொழில்களில் தேர்ச்சிபெற்று பொருள் சம்பாதிக்கின்றனர் என்று ஒருவிதத்தில் சந்தோஷமே. அவைகள் என்னவெனிற் றங்களுக்கெல்லாம் தெரிந்தவிஷயமாகிய தாதுபுஷ்டி லேகியம், தாதுபுஷ்டி மாத்திரை, சூலக்கட்டி, கைகால்பிடிப்புக்கு மயிலெண்ணை, வாசனைப்பொடி பலவிதமான பல்பொடி, அநேகவிதமானவாசனைத்தைலங்கள், வாசனைச்சோப்புகள் வாசனை வெற்றிலை, பாக்கு, சோடா, லிமனட், ஆரஞ்சி, காப்பி கிளப், சாராயம், பீர், அபீன், கஞ்சாகடைகள், நாடகக்கம்பேனிகள், பாட்டுக்கச்சேரிகள் முதலானவைகள்.

ஆகா? என்ன நூதன விஷயங்கள் அபிவிருத்தியாகிவருகின்றன! நமது நாடு செய்த புண்ணியமே புண்ணியம்.

இத்துடன்இவ்விடம் இருத்தி என் இந்தியர்கள் நாளுக்குநாள் பலஹீனர்களாகிறார்களென்று, என்சிற்றறிவிற் கெட்டிய சிலகாரணங்களை ஆராய்ந்து வெளியிட்டு அவைகளுக்கு மாறுதலைகளை உரைக்க கருது முன்னர், நான்எழுதிவரும் விஷயங்களில் ஏற்படும் தவறுகளை மன்னித்து உண்மையைக்கைக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

J. S. நரசிம்மலுநாயுடு

# "பாந்தியா" என்னும் பண்புடைக்குமரி சரிதை.

(425-ம் பக்கத்தொடர்ச்சி)

ஆதலி னேய னேகே ளரிவையைக் காண யானும்
போதலே தீதா மென்று புகன்றபின் சைரஸ் தானுந்
தீதிலா வகையா னிந்தத் திருந்திய வணங்கைக் காக்கப்
பேரதொரு சிறிதுந் தாழாய் போதியிக் கணமே யென்றான்.

கனமது பெற்று வாழுங் காவலர் தம்மின் மிக்க
தினகர னென்னு மாறு திருந்திய வறிவோ யுன்றன்
மனதினிற் றிண்மை யுண்டேன் மதிபிறி தாகுங் கொல்லோ
வெனவுரை யாடி நண்ப னினிதினிற் பெயர்ந்தான் பின்னை.

கிட்டின னவனு மன்று கிள்ளைபோல் வாளைப்பின்னர்
மட்டுவார் குழலா டன்மேன் மையலே யுற்றா னன்றிக்
கட்டழ கினட னன்னைக் கலக்கவே யுன்னியன்னான்
றுட்டன்போ லவளை யங்கு தொந்தரை மிகவுஞ் செய்தான்.

கொடியவ னேது செய்துங் கொடியிடை மாது தன்னின்
றிடமுள மனந்தா னேதுந் திரும்பிய திலதே யன்னாள்
கடிமணம் புரிந்து கொண்ட கணவனே யல்லால் யாரித்
துடியிடை யணங்கு தன்னைத் துணைவியாய்க் கொள்வார் தாமே?

ஆதலி னவளி னன்னை யசைக்கவே துணிந்தோன் றன்னைப்
பாதக நீயே யிந்தப் பாவியை வருத்து கின்றாய்?
போதி நீயென்று நின்று புண்ணுழை யம்பு போல்வாய்
காதலனாற் 'கப்ர டேடிஸ்' + நல்லனே யன்றி யின்றால்.

என்றுரை யாடி நின்ற வினியவ டானு மப்பா
லொன்றிய தூதன் றன்னை யுடன்றெரிந் தெடுத்துப்பின்னை
வென்றிவேற் சைர ஸென்னும் விபுதனுக் கிதனை நீயிஞ்
சென்றுமே யுரைத்தி யென்று செப்பியே விடுத்தா ளங்கு

அன்னவ னங்கு நின்று மகன்றன னணங்கின் கூற்றை
மன்னவன் றன்பாற் கூறி மாதவள் குறையைத் தீர்க்கப்
பின்னதை யரசன் பாலும் பேசியே நிற்க வன்னான்
நன்னல முடனுங் கேட்டா னண்பனின் செய்தி தன்னை

+ Abradates.

மாறினைத் தீண்ட வெண்ணு மதியிலான் பக்க லபயாற்
கோறிலான் விடுத்தா னன்று குணமுளா னொருவன் றன்னை
நாதனின் மொழியே யன்றி நவின்றன னவனும் வேறே
யேது நீ யிந்தவண்ண மிழைத்தனை தீங்கை யென்றே

புண்ணுடை யெருது தன்னைப் புட்களிற் கரியதொன்று
நண்ணியே துன்பஞ் செய்ய நாவினாற் கூற லின்றி
யெண்ணியே யேங்கு மாபோ லேங்கியே நின்றான் றன்னைக்
கண்ணியன் றாதன்றானுங் கடுமையாய் முனிந்த காலே.

தன்பெரு நண்ப னக்காற் றுங்கியே வருந்தல் கேட்ட
வன்புடை யதிபன் மற்றவ் வன்பனை யழைத்துக் கூறு
மென்பெரு நண்ப நீயு மேங்கலை யிதனான் மிக்கப்
பொன்னுல கவர்க டாமும் புரிந்துளா ரிதுபோ லென்றே.

[தொடர்வுறும்.] K. S. K.

## சுலோகம்.

I. "மர்த்தனம்! மர்த்தனம்!!
II. "ச்வான ஹஸ்தி விருத்தாஞ்சனம் கலு.
க்ருமீ பாஷாண தண்டுலம் படித்வா!
உத்ரக் ருகம தஹ தஹ
புஷ்பதில பத்ரம் பச, பச!"

செந்தமிழிலும் இப்பாண்ட வாலாமோவென்று வெறுக்காமல் விடை பகர்வீர்களென்று நம்பும். நண்பன்.

A. Kuppuswami Aiyar.

ஸ்ரீ நடராஜம் பஜே.

நடராஜம் பஜா.

ஸ்ரீஞானசம்பந்த குருவர்யாயநம:

## தேவதார்ச்சனை *

இது தேவதைகளின் அர்ச்சனை யென்பது பொருள் வைதிக விப்ரர்கள் முதலிய ஆரியர் பலரால் செய்யப்படுவது தேவதார்ச்சனையில் பூஜிக்கப்படும் மூர்த்திகளாவன.

ஆதித்யம் அம்பிகாம் விஷ்ணும்
கணே சஞ்ச மஹேஸ்வரம்

இதனால் தேவதார்ச்சனை சிவோத்க்ருஷ்டமாய் விளங்குகிறது ஆன்றோரால் உபதேசம் செய்யப்பட்ட பிறகே பூஜாயோக்யம் உண்டாகிறது பூஜா காலத்துக்கு முன் பஞ்சாக்ஷரஜபம் செய்யவேண்டும்

அஃது இன்றேல் பூஜாயோக்யம் சித்திக்காது பஞ்ஜாக்ஷர உபதேசம் செய்யப்பட்ட பிறகே சிவ பூஜாக்கிரமம் உபதேசமாகும் வேதவித்து க்கள் எக்காரியம் தொடங்கினும் பரமேஸ்வரப் பிரீதியாகவன்றோ சங் கல்பம் செய்துக்கொள்ளுகிறார்கள்.

பூஜாக்காலத்தில் தினமும் எம்பெருமானுக்கு பிராணப் பிரதிஷ் டைசெய்யப்படுகிறது. இதர மூர்த்திகளுக்குச்சமமாக எம்பெருமானை வைத்து அர்ச்சிக்கலாமோவெனில் பதில் கூறுவாம்.

அபிஷேக காலத்தில் ஸ்ரீருத்ர நமகசமங்கள் படிக்கப்படுகிறது. "ஓம் நமஸ்தே அஸ்த்து ருதாமன்யவ" என்றற்றொடக்கத்து வாக்யம், யஜுர் வேதத்தில் கோஷிக்கப்படுகிறது ருத்ர நமகசமகங் கள் முழுவதும் சிவதத்துவத்தையும் பஞ்ஜாக்ஷர மகிமையயும் வெளி ப்படுத்துவதை சிவநேசச் செல்வர்கள் அறியாமற் போகார் பஞ்ஜா க்ஷர உபதேசமல்லாத ஸ்ரீ (அன்னம்) எக்காரியம் செய்வதற்கும் அரு கமல்ல அன்னவள் செய்தபாகமும் தேவ? பிராமண ஆராதானகனுக் கு யோக்யமல்ல என்று நிக்ருஷ்டப்படுத்தப்படுவதால் பஞ்ஜாக்ஷரம் வேதப் பிராமணரில் இருபாலருக்கும் ஏனைய ஆரியர்களுக்கும் அத் தியாவசியமென விளங்கப்படுகிறது. பெண்பாலருள் சோமவாரம், சௌக்தி, பிரதோஷம், சிவராத்திரி, சஷ்ட்டி முதலான ஏனைய விர தங்கள் அனுஷ்ட்டித்து உத்தியாபவனை செய்வதும் உலகமறியுமே!

சிவாராதனைக் காலத்தில் விப்ரர்களால் கோஷிக்கப்படும் வேதங் களைக் கேட்க ஒவ்வொருவர் மனதும் பரவசமடைந்து ஆனந்த பாஷ் பம் சொரிய நிர்ப்பாரென சொல்லவும் வேண்டுமா? நேரில் அனுப வித்தவர்க்கே அதன் ஆனந்தம் தெரியும் இதனால் சமயகுரவர்களால் அருளப்பட்ட தமிழ்மறையும்இன்பம் பயக்குமென்பதில் தடையில்லை வேத கோஷ்டத்தை வேதகானமென்றும் சாமவேதகானத்தால் எம் பெருமான் அதிக மகிழ்வடைந்ததும் புராணேதி காசங்கள் விரித்து ரைக்கும். சிவனேசர்காள்! இவ்வளவும் வரையப்புகுந்தது. "சைவ சித்தாந்தசாதனம்" என்னும் வியாசத்தை யான் படிக்க நேர்ந்தத னால் தான் இன்னும் அவ்வியாசத்தில் எனது அன்பர் வேதாரண்யத் தில் ருக் ஆதி வேதங்கள் பரமசிவனை அர்ச்சிக்கவில்லை யென்றும் தமிழ்மறையே தான் அர்ச்சித்து தென்றும் நான்மறை அர்ச்சித்திருப் பின் அது கொடுத்த வாக்குப்படி கதவுதிறக்கப்படாதிருக்கவேண்டும்

(இன்னும் வரும்)

A. குப்புசாமி அய்யர்.

# பலதேசவர்த்தமானம்.

---

**மணிப்பூரில் வெள்ளம்:**—வடகிழக்கு இந்தியாவிலுள்ள மணிப்பூரில் கனவெள்ளமென்று சமாசாரம் எட்டியிருக்கிறது. இப்பால் நதியில் திடீரெனப் பெருக்கெடுக்க மணிப்பூர் ராஜாவின் அரண்மனையைச் சுற்றி வெள்ளம் கோத்துக்கொண்டு விடும்போலிருக்கிறது.

## ஒரு ராஜாங்க கைதி விடுதலையாதல்.

ராஜத்து வேஷமாகப் பேசித் தண்டனையடைந்து இதுவரை சேலம் ஜெயிலிலிருந்த சுப்பிரமணிய சிவா இம்மாதம் 13-ந் தேதி விடுதலையானாரென்று தெரிகின்றது.

## சிங்கமுகப் பிள்ளை.

காஞ்சீபுரத்தைச் சேர்ந்த வெப்பேடென்னும் கிராமத்தில் கன்னி நாயகனென்பவனது மனைவி சென்றமாதம் 12-ந் தேதி இரவு சுமார் இரண்டு மணிக்குச் சிங்கமுகமுள்ள ஒருபிள்ளையைப் பெற்றாள்; அஃதுடனே இறந்து போயிற்று.

## அமேரிக்காவிலகப்பட்ட ஹிந்து விக்கிரகங்கள்.

அமெரிக்காவின் ஒரு பகுதியான ஒஹையே, சின்ஸிநாட்டி, மிசிஸிபி நதியோர முதலியவிடங்களிலுள்ளவர்கள் சிலகாலத்திற்கு முன் நிலங்களை வெட்டியும் தோண்டியும் பண்படுத்த முயன்றபோது அவற்றில் ஹிந்து சிற்ப சாஸ்திர முறைப்படி செய்துள்ள விக்கிரகங்கள் பல அகப்பட்டன. இவை சுமார் கி. மு. 13-வது நூற்றூண்டில் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்று அவற்றின் மீதுள்ள குறிகளால் அறியப்படுகின்றனவாம். இதனால் இந்துக்கள் சுமார் 3000 வருஷத்திற்கு முன் அமெரிக்கா கண்டம் பரியந்தம் பிரசித்தி யடைந்திருந்தனரென்பது நன்கு விளங்கும். அக்காலத்தில் இந்துக்களுக்குக் கப்பல் யாத்திரை செய்வது சாதாரண வழக்கமாயிருந்தது போலும்.

## சோரப்பிள்ளையால் ஒருத்தி அதிர்ஷ்டவதியானாள்.

ஜெர்மெனியின் கீழ்பாகத்திலுள்ள ரெஷ்தனிர்ஸ் என்னும் ஊரில் ஒரு பெரிய பணக்காரர் வீட்டுப்பெண் விவாகமாகாதவளாயிருந்தும் சோரத்தனமாய் ஒருவனுடன் கூட்டுரிமை பாராட்டி வந்தாள். அதன் பயனாகக் கர்ப்பவதியானாள். பிரசவமாவதற்குச் சிறிது நேரத்திற்கு முன் ஒருவருக்குந் தெரியாமல் தனியாகத் தன்னுடைய மோட்டார் வண்டியில் ஏறி, நெடுந்தூரஞ் சென்று, ஜனங்களின் போக்குவரவில்லாத நடுவெளியில் பிள்ளையைப்பெற்று, சிறிது தூரத்தில் நின்றுகொண்டிருந்த ஒரு ஏழை ஸ்திரீயைக் கூப்பிட்டு "இந்தக்குழந்தையை நீ எடுத்து வளர்த்துக்கொள்" என்று கூறி ஒரு காகிதத்தையும்

அவளிடம் கொடுத்துவிட்டு மோட்டார் வண்டியிலேயே திரும்பிவிட்டாள். அந்த ஏழை ஸ்திரீ பிள்ளையில்லாதவளானதினாலும், குழந்தை மிகுந்த அழகுடன் விளங்கியபடியினாலும் அன்புடன் அக்குழந்தையைத் தன் வீட்டுக்கு எடுத்துச் சென்றாள். வீட்டுக்குச் சென்றபின் காகிதத்தைப் பிரித்தாள். அதற்குள் 400 பவுனுக்கு நோட்டுக்கள் இருந்தன. விதிவசமாய் சோரத்தனத்துக்கு அந்தப்பிரபு வீட்டுப் பெண் ஆளானபோதிலும், பெற்ற குழந்தையைத் தற்காலத்தில் அநேக சோரஸ்திரீகள் செய்வதுபோல் கொலை செய்து மறைத்துவிடாமல் பணங்கொடுத்து வளர்க்கும்படி செய்தது மிகவும் பாராட்டத்தக்கதன்றோ!

**ஆனரபிள் மிஸ்டர் கோகலே:**—ஆனரபிள் மிஸ்டர் கோகலே இங்கிலாந்திலிருந்து தென்னாப்பிரிக்காவுக்கு இம்மாத ஆரம்பத்தில் புறப்பட்டு விட்டார்.

**ஐம்பது லட்சம் பவுன் புகையிலையினால் சம்பாதித்தவர்:**—சமீபத்தில் லண்டனில் இறந்துபோன ஹென்றி வில்ஸ் என்பவருக்கு 5,214,356 பவுன் ஆஸ்தி இருக்கிறதென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இவ்வளவு தொகையும் அவர் புகையிலை விற்றே சம்பாதித்தாராம்.

**காகை தாலூகாபோர்டில் சமீபத்தில் நடந்த மீட்டிங்கு:**—கடந்த மாதம் 25-ந்தேதி நடந்த மீட்டிங்கில் தாலூகாபோர்டு கிளார்க்குகளுக்கு ஆரம்பச் சம்பளம் இதுவரையில் 15 ரூபாவாக இருந்ததை இனி 20 ரூபாவாக ஆக்கப்படுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

**தையல் வேலையிலிருக்கும்போதே உயிர் நீங்கிய தையற்காரன்:**—உதகமண்டலத்தில் கடந்த செவ்வாய்க்கிழமையன்று ஒரு தையற்கார வாலிபன் கடையில் உட்கார்ந்து வேலைசெய்துகொண்டு இருந்தபோதே திடீரென்று சாய்ந்தானாம். உடனே உயிர் போய்விட்டது. இவனுக்கு வயது 25 இருக்கலாம், ஓயாமல் சிகரெட்டு குடிக்கும் வழக்கம் இவனுக்குண்டாம். சிகரெட்டு பிடிக்கும் வாலிபர்களுக்கு இது ஓர் எச்சரிக்கையாகும்.

**ஜீலம் கஜானாவிலொரு மோசம்:**—சமீபகாலத்தில் ஜீலங்கஜானாவிலொருவன் ஆள் மாறாட்டமாகவந்து பெருந்தொகைப் பணத்தை வாங்கிப்போய் விட்டான் அவனைப் பிடிக்கப்போலீசார் டேர்மான் கிராமத்திற்குச் சென்றனர் அவர்களை அக்கிராமவாசிகள் தடுத்து அவனைப்பிடித்தல் கூடாதென்று ஆட்சேபித்து அவர்களோடு சண்டைசெய்தனர்; போலீசாரோ அதுபற்றித் துப்பாக்கிப் பிரயோகஞ்செய்தனர் சுமார் 40 பேரைப் போலீசார் பிடித்திருக்கின்றனர்.

இனும்! இனும்!!

தபாற்செலவுமில்லை. விலையுமில்லை.

நீங்கள் இல்லறத்தில் அல்லல் நீங்கி நீடித்த சுகவாழ்வைப்பெற விரும்பினால் உடனே உங்கள் விலாசத்தைத் தெரிவியுங்கள்.

## ஸ்திரீ சமாகம்.

என்னுமோர் சிறந்தபுத்தகத்தை பொது நன்மையைக்கருதி இனமாக அனுப்புகிறோம். இப்புத்தகத்தில் நம்முன்னோர்செய்த பொன்போன்ற விதிகளை அமைத்து எழுதப்பட்டிருக்கின்றது ஒவ்வொருவரும் வாசிக்கவேண்டிய தவசியம்,

இப்புத்தகத்திற்கு இன்றைக்கே எழுதுங்கள்.

வைத்தியசாஸ்திரி

**மணிசங்கர் கோவிந்தஜி.**

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்

22 பிராட்வே & 96, மவுண்ட்ரோட் மதராஸ்.

ஏஜெண்டு:—

M. A. நெல்லையப்ப முதலியார்,

38 சின்னக்கடைத்தெரு,

திருச்சிராப்பள்ளி.

இனம்! வைத்திய ஸித்தி இனம்!!

# 144 பக்கங்களடங்கியது.

சிறுவர்களுக்கு ஓர் உபாத்தியாயர், யௌவனஸ்தர்களுக்கு நீதி போதகன், ஸ்திரீகளுக்கு மருத்துவச்சி, வியாதியஸ்தர்களுக்கும், விருத்தாப்பியர்களுக்கும் ஒரு பெரிய இராஜவைத்தியன்.

இந்த அருமையான சிறிய மிகவும் உபயோகமான புத்தகத்தில் மானிடஜாதியின் பூரண ஆயுசு பரியந்தம் அனுஷ்டிக்க வேண்டிய ஆயுர்வேதசாஸ்திரோக்த நிபந்தனைகளின் மேன்மையான சில சாராம்ஸங்களை அடக்கி இருக்கின்றன.

இப்புத்தகத்தை வாசிப்பதினால் வாசிப்போர்க்கு இப்புத்தகம் ஆரோக்கியம் செல்வம், சுகம் தீர்க்காயுசும் அடைவதற்கு சிலமேன்மையான வழிகளை காட்டுகின்றது.

தவராதே யுங்கள்! தவராதேயுங்கள். ஒரு காலணா போஸ்டு கார்ட்டை இன்றையத்தினமே முழுமேல்விலாசத்தோடெழுதுங்கள். தபால்சார்ஜ் விலையும் இல்லாமல் அனுப்பப்படும்.

## இராஜவைத்திய நாராயணஜி கேசவஜி.

சொக்கக்காரர் ஆயுர்வேதோதய ஔஷதாலயம்,

177 சினைபஜார் ரோட்டு மதராசு.

ஜாம் நகரத்தின் ஆயுர்வேத ஔஷதாலயத்தின் மதன மஞ்சரி மாத்திரைகளைப்போல் சிரேஷ்டமான குணங்களுடைய சில சாஸ்திரோக்தமான மருந்துகள் வகைறுக்கள்.

**நபுன்சகத்வாரி கிருதம்.**
12 தோலாடப்பி1-க்கு ரூ. 1—0—0

**ரமணவிலாசினி வடிகா.**
6 மாத்திரை டப்பி 1-க்கு ரூ. 1—0—0.

**மேஹமர்தன சூரணம்.**
10 தோலா டப்பி 1-க்கு ரூ. 1—0—0

**கர்பாமீருதசூர்ணம்.**
10 தோலா டப்பி 1-க்கு ரூ. 2—0—0.

**பாலபுஷ்டிகரணவடிகா.**
120 மாத்திரை டப்பி 1-க்கு ரூ. 1—0—0.

**ஸ்வாஸகாசாரி அவலேஹ.**
20 தோலா டப்பி 1-க்கு ரூ. 1—8—0.

**விரேசன வடிகா.**
40 மாத்திரை டப்பி 1-க்கு ரூ. 0—10—0.

**பல்பொடி.**
டப்பி 1-க்கு ரூ. 0—4—0.

**தேமல் தைலம்.**
டப்பி 1-க்கு ரூ. 0—4—0.

**கர்னதைலம் அல்லது காதுநோய் மருந்து.**
புட்டி 1-க்கு ரூ. 0—8—0.

**மகாஜ்வராங்குசமாத்திரை.**
24 மாத்திரைகள் ரூ. 1—0—0.

**கேஷதஸ்மாகர தைலம்.**
புட்டி 1-க்கு ரூ. 0—10—0.

**Supplement to this issue.**



# தமிழ்மொழியும் நம் கடமையும்.

ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
யூக்கா ரறிவுடை யார்—*குறள்.*

*ஆரிய சகோதரிகாள்!*

ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியைத் துரத்துவதுபோல் இத்தேசத்தில் ஆங்கிலேயபாஷை விர்த்தியாக நமது தேச பாஷையாகிய தமிழ் க்ஷீணித்துவிடுகிறது. உலகத்தின் படைப்பிற்கு ஆதிகாரணனும், தாயுமான பரமேஸ்வரனால் உண்டாக்கப்பட்டு, அகஸ்தியர் நாவிலே பிறந்து, ஆரியத்தின் மடியிலே வளர்ந்து, ஆந்திரம் முதலிய பாஷைகளின் தோழமை பூண்டு, சங்கப்புலவர்களின் நாவிலே சஞ்சரித்து, வித்வான்களதுவாக்கிலே திராவிட முழுவதும் ஏக சக்ராதிபத்யம் செலுத்திவந்த தமிழ அரசியை இகழலாமா? இக்காலத்து தமிழர்களே தமிழை கைசோர விடுவது அவர்கள் பிறந்த ஜாதிக்கடுக்குமா? ஆங்கிலேயர்களுக்குத் தங்கள் பாஷையிலிருக்கும் அபிமானத்தைப் பாருங்கள்! அதை உலகெங்கும் பரவச்செய்துவிட்டார்கள். நம் சகோதர சகோதரிகள் எப்பொழுதும் ஆங்கிலேயர்களைப்போல் நடக்க வாரம்பிக்கிறவர்கள் பாஷாபிமானத்தில் மட்டும்பின்தங்குகிறார்கள். ஆங்கிலேயர்களுக்கு சொந்த பாஷையில் அபிமானமிருப்பதுபோல் நம் சகோதரசகோதரிகளுக்கும் சொந்த தாயாகிய தமிழின்பேரில் அபிமான மிருக்க வேண்டுமன்றோ?

கேவலம் ஐரோப்பியர்களைப்போல் சொக்காயும், பூட்ஸும் தொப்பியும் மாட்டிக்கொண்டு முக்கியமான விஷயத்தில் அவர்கள்போலிராதது ஆச்சரியமே! ஈனஜாதியிற் பிறந்தவர்கள்கூட தலையை மொட்டை யடித்துக்கொண்டு சொக்காய், நிஜார், பூட்ஸ், தொப்பி முதலிய சின்னங்களை தரித்துக்கொள்ளலாம். ஆனால் உபயோகமுள்ள மற்ற விஷயங்களில்ஐரோப்

பியர்களுக்கு உள்ள ஊக்கமும் தாராள சிந்தையும், சரீர பலனும், பாஷாபிமானமும், படிப்பாளிகளான பிரபு வம்சத்திற் பிறந்தவர்களுக்கேயன்றி மற்ற சாதாரணமாய் அற்ப விஷயத்தில் ஆசைபடுகிற அரைபடிப்பாளிகளுக்கு உண்டாவது அருமை. முதலில் ஐரோப்பிய நாகரீகத்தை விரும்பும் ஒவ்வொருவரும் சொந்த பாஷையில் அபிமானம் கொள்வது அவசியம். நமது நாகரீகத்தையே சிரேஷ்டமாக மதிப்போர்களுக்கு தமிழை பரிபாலிப்பதற்கு நாம் சொல்ல வேண்டுவதில்லை. எண்ணிறந்த தேவாலயங்களும், பிரம்மாலயங்களும், அன்னசத்திரங்களும், நீர்வளமும், நிலவளமும், நாகரீகமும், ஆசார நியமங்களும் நிறைந்த நமது தமிழ்நாடு மற்றைய நாடுகளிலும் விசேஷமென்றும் அப்படியே தமிழ் பாஷை சர்வோத்கிருஷ்டமான பாஷை யென்றும் சகலரும் அங்கீகரிக்கிறார்கள்.

நம்மை பெற்றதும் தமிழ், வளர்த்ததும்தமிழ், நம்மை தாலாட்டித் தூங்கவைத்ததும் தமிழ், நம்முடைய மழலைச் சொல்லால் நம் தாய்தந்தையரை சந்தோஷிப்பித்ததும் தமிழ். நாம் அப்பா, அம்மா என்று குழந்தை பருவத்தில் உச்சரித்தோமேயன்றி பப்பா, மம்மா என்று உச்சரிக்கவில்லையன்றோ? நம்முடைய அன்னையும் தந்தையும் நமக்குட் பாலோடு புகட்டினதும் தமிழ், தாய்தந்தை குருமுதலானவர்கள் நமக்கு ஆதியில் உபதேசித்ததும் தமிழ், ஆதிகால முதல் நம்முன்னோர்க ளெல்லோரும் பேசினதும் தமிழ், இப்போது நம்முடைய மாதா பிதாக்களும் உறவினர்களும் பேசுவதும் தமிழ், இப்படிப்பட்ட அரிய தமிழைவிட்டு அன்னிய பாஷையை எப்போதும் அப்பியாசிப்பது சுற்றத்தாரைவிட்டு அன்னியர்களை நேசிப்பது போலாம். ஆபத்துகாலத்தில் சுற்றத்தார் உதவுவார்களேயன்றி அன்னியர்கள் உதவமாட்டார்கள். அதுபோல் தமிழ்பாஷையே நமக்கு எப்போதும் உதவக் கூடியது. இதனால் மற்ற பாஷைகளைப் படிக்கக் கூடாது என்பது எமது கருத்தல்ல. சொந்தபாஷையை நன்றாய்ப் பயின்று அவகாசமிருந்தால் அன்னிய பாஷைகளையும் அப்பியாசிப்பது நல்லது. சீமையிலிருந்து கலெக்டர்களாக இவ்விடத்தில் உத்தியோகம் பெற்று வரும் ஒவ்வொருவரும் தமிழில் தேறி சர்டிபிகேட் பெறவேண்டு மென்று சர்க்காரில் ஏற்பாடு செய்திருக்

கிறார்கள். வெள்ளைக்காரர்களே நமது தேசத்தாருடன் ஒற்றுமையாய் வாழ நமது அருந்தமிழை அப்பியாசிக்கும்போது நாம் நமது பிள்ளைகளுடனும், பந்துக்கள் சிநேகிதர்களுடனும் உறவாடவாவது தமிழை நன்றாய்ப் பயிலவேண்டாமா?

ஐயோ! இங்கிலீஷ்படித்த சிலபால்யர்களும் பால்யைகளும் தமிழை யலக்ஷியம் செய்வதால் ஒரு வாக்கியங்கூட பிழையின்றி எழுதத் தெரியாமல், எப்போதும் இங்கிலீஷ் வார்த்தைகளையே யுச்சரித்துக்கொண்டு அகத்திலுழல்கிறார்கள். இன்னும் சிலர் தங்களுக்குத் தமிழ் தெரியாதென்று சொல்லிக்கொண்டால் பெருமை யென்று அகந்தை கொள்கிறார்கள். தமிழ் தெரியாதென்றால் இங்கிலீஷில் மேதாவி யென்பது எந்த தர்க்க சாஸ்திரத்தை யொட்டியதோ அறியோம். சிலர் தமிழ் புஸ்தகங்களை கையிலே தொடுகிறதா யிருந்தால் பாம்பின் புற்றுக்குள்ளே கைவிடுவதுபோ லிருக்கிறது. அவர்களுக்குத் தமிழ் பேசுவதென்றால் வேப்பிலை கஷாயம் குடிப்பதுபோலிருக்கிறது. தமிழ் வார்த்தைகளை கேட்டால் கர்ண கடூரமாயிருக்கிறது. தமிழ் பேசினாலும் முக்காற்பங்கு இங்கிலீஷும் காற்பங்கு தமிழுமாக கலந்து பேசுகிறார்கள். அவர்களுக்கு தேசத்தின் பேரிலும் பாஷையின்பேரிலும் அக்கரை கிடையாதென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

பகுத்தறிவில்லாத மிருகஜாதிகள்கூட தங்கள் சொந்த பாஷையைமறக்கிறதில்லை. அப்படியிருக்க மனுஷன் சொந்த பாஷையை மறப்பது தர்மமாகுமா? நாகரீகமடைந்த ஐரோப்பியர் முதலிய இதர ஜாதியார் தங்கள் பாஷையைகௌரவமாக போற்றிவர, நம்மவர்கள் ஏன் அலக்ஷியம் செய்கிறார்கள்? இங்கிலீஷ் பாஷையிற் சிறிது விற்பத்தியுள்ளவர்கள் தமிழையும், தமிழ் வித்துவான்களையும் அவமதிக்கிறார்கள். தமிழ் நூற்களையே பாராத இவர்கள் அவைகளுக்கு எப்படி பழுது சொல்லக்கூடும்? திருவள்ளுவர் குறளையும், கம்பனுடைய கற்பனையையும், நாலடியார்களின் நற்செய்கைகளையும், ஔவையாரின் நீதி நூலையும், செவ்வையாக அறிந்திருப்பார்களா? இன்னும் எண்ணிறந்த தமிழ் வித்வான்கள் பாடலை வாசித்தறியாத பேர்கள் தமிழை அலக்ஷியம் செய்வது என்ன அறிவீனம்? நமது நாட்டிலுள்ள கிராமவாசிகளீறாக சகலரும் தமிழை சுத்தமாக பேசு

வும், படிக்கவும், எழுதவும் பயின்றாலன்றி நம் தமிழ் சரீர விர்த்தியடையவும் இவ்விந்தியா நாடு செழித்தோங்கவும் வகையில்லை. ஆகையால் ஆண் பெண் இருவகையாரும் தமிழைப் போற்றி வருவார்களென்று நான் அதிக ஆவலுடனெதிர்பார்த்தவளா யிருக்கிறேன்.

தங்கள் பிரிய சகோதரி,

**தமிழபிமானி.**

[நம்சகோதரி எழுதியது யாவும் உண்மையே. **தமிழ்**மொழியின் அபிவிருத்தியன வசியம் எல்லாரும் மறந்திருக்கிறார்கள். நாட்டின் சிறப்பு மொழியின் பயிற்சியால் வர வேண்டுமே யொழிய **அன்னிய** பாஷைபயில்வதால் உண்டாகாது. இது ஒரு பெரிய உண்மை. இதற்குச் சான்று பகர்வோம்.

தந்தாய் போன்ற சக்ரவர்த்தி யிருக்கும் இங்கிலாந்து நாட்டில் முழுதும் 1066 ஆண்டு முதல் 1362 ஆண்டு வரையில் ஆண்டுவந்த மன்னர்களின் ஒருவித அபிமானத்தால் பிரஞ்சு பாஷையே ராஜ பாஷையாக வழங்கிவந்தது. பின் தேசாபிமானம் பற்றி பிரஞ்சு பாஷையைத் தள்ளிவிட்டு ஆங்கில பாஷையை ராஜ பாஷையாக்கின பிறகு தான் இங்கிலாந்து நாடு நாகரீகத்திலும் செல்வத்திலும் கீர்த்தியிலும் புகழோங்கிற்று. அம்மாதிரியாகவே **ஜர்மெனி**, ருஷியா, பிரான்ஸ் இத்தாலி முதலிய நாடுகளும் தங்கள் தங்கள் பாஷையினாலேயே கீர்த்திபெற்றிருக்கின்றன. இவைகள் புராதனம். இப்பொழுது கீழ்ச் சமுத்திரத்தில் கதிரவன் போல் விளங்கும் ஜப்பான் நாடும் தங்கள் பாஷையின் அபிவிர்த்தி யினாலேயே எந்நாடும் பெறாத புகழடைந்திருக்கிறது. ஜப்பானியர்கள் தங்கள் நூல்களைக்கற்று அவைகளின் நன்மைகளை ஏற்றுக்கொண்டு, பிறதேசங்களிற் சென்று அவ்விடத்திய நூல்களையும் பயிற்சியையுங்கற்று "நன்மைகடைப்பிடி" என்னும் திருவாக்கின் பிரகாரம், அவைகளின் சாராம்சங்களைக் கைக்கொண்டு தங்கள நாட்டிற்குவந்து, தம்பாஷையில் புதிய நூல்களியற்றியும், மொழிபெயர்த்தும் எவ்விடமும் சுயபாஷை பள்ளிக்கூடங்கள் அமைத்தும் சுயபாஷையிலேயே கல்வி கற்கும் இந் நன்னிலைமைக்கு வந்திருக்கிறார்கள். ஆகையினால் தேசாபிமானம், மதாபிமானம் முதலியவற்றிற்கு பாஷாபிமானமே காரணமென்று இதனால் நன்கு போதரும்—பத்திராதிபர்.]

[குறிப்பு.—இவ்வித துண்டுப் பத்திரிகைகள் அடிக்கடி பிரசுரித்து சகோதரிகள் வீடெங்கும் பரவச் செய்வோம். அதற்கு விஷயங்கள் நஞ்சகோதரிகள் எழுதி "பத்திராதிபர், ஆசாரசீர்திருத்தம், வேப்பேரி, "சென்னை" என்ற விலாசத்திற் கனுப்பும்படி கோருகிறோம். இப்பத்திரிகைகள் வேண்டுவோர்களும் மேற்குறித்த விலாசத்திற்குக் கடிதம் எழுதி பெற்றுக்கொள்ளலாம்.—ப-ர்.]

4000—1-10-12. MEYKANDAN PRESS, MADRAS, N.C.

## S. P. G. High School Magazine:—

### எஸ். பி. ஜி. ஐஸ்கூல் மாகசீன்.

அக்டோபர் மாதத்திய சஞ்சிகை வெளிவந்து எமது கையிற்சேரப் பெற்றோம். நமது அறிவையும் ஒழுக்கத்தையும் விருத்தி செய்யக்கூடிய அருமையான விஷயங்கள் பல அடங்கப்பெற்றிருக்கின்றன. இதனை ஒவ்வொருவரும் வாங்கி வாசித்தாற் றப்பாது பயன் பெறுவரென்பதற்குச் சந்தேகமில்லை.

தனிப்பிரதி ஒன்று 4-அணா தான்.

பத்திராதிபர்.

## எம்பையர் இன்ஷுரன்ஸ் கம்பெனி (லிமிடெட்)

### பம்பாய்.

**அனுகூலங்கள்:**—இந்தியன் கம்பெனி; கம்பெனியின் ஆஸ்தி அங்கிலேய ஆளுகையின் அரவணைப்புக்குள்ளிருக்கிறது; சந்தா அங்கிலேய அல்லது இந்தியக் கம்பெனிகளைவிடக் குறைவு; சிட்டை முறிப்போருக்கு மற்றக் கம்பெனிகளைவிட உயர்ந்த தொகை கொடுக்கப்படும். கடன்கள் நூற்றுக்கு அரைவட்டி பாத்தியக்கணக்குகள் சீக்கிரம் முடிக்கப்படும்: &c.

திருச்சினாப்பள்ளி, ஏஜண்டு, பேல்விலாசம்

ஜே. ஜி. ஞானதுரை,

Son of Mr. ஜே. ஞானமுத்து அவர்கள் B. A., L. T.,

புத்தூர், திருச்சினாப்பள்ளி.